<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

MCOP 238/2019

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 20.09.2024

Pw1 (தங்கவேலு)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தைநேரில் பார்க்கவில்லை என்றால் சரி. விபத்து பற்றி நான் உறுதி பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் நேரடியாக எனக்கு தெரிந்தவரை அல்ல என்றால் சரி. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு மற்றும் பதிவு சான்று இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் என் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் ஓட்டிய வாகனத்தின் இன்சுரன்ஸ நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல. என் மகன் விபத்து சமயத்தில் தலைக் கவசம் அணியவில்லை என்றும், அவ்வாறு அணிந்திருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனின் மருத்துவ செலவுகள் மற்றும் இறுதி சடங்கிற்கான செலவுகளாக ரூ.200000/- செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். என் மகனின் வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை காண்பிக்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எல் அண்ட் டி கம்பெனியில் என் மகன் சீனியர் சாப்ட்வேர் இன்ஜினியராக வேலை செய்து மாதம் ரூ.60000 சம்பாதித்து வந்தார் என்பதை காண்பிக்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானோ என் மனைவியோ ஒருபோதும் என் மகனை சார்ந்து

இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 5 மற்றும் 6 ல் சொல்லியுள்ள சங்கதிகள் மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 20.9.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS